අතුරුදහන් වූ තැනැත්තන් පිළිබඳ කාර්යාලය
காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம்
THE OFFICE ON MISSING PERSONS

# பதவி வெற்றிடங்கள்

காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகமானது, 2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (ஸ்தாபித்தல், நிர்வகித்தல் மற்றும் பணிகளை நிறைவேற்றுதல்) சட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட ஓர் அலுவலகமாகும்.

காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் பின்வரும் பதவிகளுக்காக பொருத்தமான தகைமைகளையுடையவர்களிடமிருந்து **2 வருட ஒப்பந்த காலத்துக்**கு (3 மாத தகுதிகாண் காலப்பகுதி உட்பட) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## நிதி மற்றும் வழங்கல் பெறுகை பிரிவுத் தலைவர் (பதவி 01) HM 1-1

## HEAD OF FINANCE AND PROCUREMENT

**பதவியின் விபரம்:** : நிதி மற்றும் வழங்கல் பிரிவின் கடமைகள் மற்றும் பொறுப்புக்களை கண்காணித்தல் மற்றும் தொடர்புடைய நிதி மற்றும் கொள்முதல் கொள்கைகள் நடைமுறைகள் மற்றும் அமைப்புக்களை உருவாக்குதல் மற்றும் அனைத்து நிதி மற்றும் கொள்முதல் நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

**துகைமைகள்** : பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்றுக்கொண்ட நிதி/கணக்கியல்/வணிக நிர்வாகம/வணிகம்/மேலாண்மை (நிதி) ஆகியவற்றில் இளங்கலைப் பட்டம் அல்லது குறித்த துறையில் தொடர்புடைய வேறு ஏதனும் பட்டம் **அத்துடன்** தொடர்புடைய துறையில் முதுகலை பட்டப்படிப்பு தகுதி (முதுநிலை) அல்லது அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டய நிறுவனத்தின் இணை உறுப்பினர், தொடர்படைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறைசார் பட்டய நிறுவனத்தின் முழு உறுப்பினர் **மற்றும்** அரச அல்லது இணை அரசசேவை நிறுவனம் ஒன்றில் அல்லது பெயர்போன தனியார் நிறுவனம் ஒன்றில் 'முகாமைத்துவ மட்டத்தில்' குறைந்தது 13 வருடங்கள் பணியாற்றிய அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

**வயதெல்லை** : 35 வயதுக்குக் குறையாதவராகவும் 55 வயதுக்கு மேற்படாதவரகவும் இருத்தல் வேண்டும்.

**சம்பளம்** : ரூ.80,295/-

வாகனம் மற்றும் எரிபொருள் போன்றவற்றுக்காக மேலதிக கொடுப்பனவுகளுக்கும் ஏனைய கூட்டிணைந்த கொடுப்பனவுகளுக்கும் உரித்து உண்டு.

**மேலே குறிப்பிடப்பட்ட அனைத்து பதவிகளுக்குமான பொதுவான விடயங்கள்:**

- அனைத்து விண்ணப்பதாரிகளும்,
  - ✓ இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
  - ✓ உடல், உள ஆரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.
  - ✓ நாட்டின் எப்பாகத்திலும் சேவை புரியக்கூடியவராக இருத்தல் வேண்டும்.
  - ✓ சிறந்த நடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.
- இந்த பதவியானது நிலையான **2 வருட கால ஒப்பந்த அடிப்படையில்** ( 3 மாத தகுதிகாண் காலம் உட்பட), அடிப்படை சம்பளத்துடன் மேலதிகமாக அங்கீகரிக்கப்பட்ட பிற கொடுப்பனவுகளுக்கு உரிமை உண்டு.
- கணினி தொடர்பான அறிவு மேலதிக தகைமையாக கொள்ளப்படும்.
- எங்களால் வழங்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தினையே பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.
- தற்போது வரையில் அரச சேவையில் அல்லது பகுதியளவான அரச சேவையில் பணி புரிபவராயின் உரிய கூட்டுத்தாபனத்தின் அல்லது திணைக்களத்தின் தலைவரினூடாக விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
- விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படும் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கப்படும் பதவியானது குறிப்பிடப்படல் வேண்டும்.
- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதிக்குள் விண்ணப்பதாரிகளினால் அனைத்து தகைமைகளும் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரிகளினால் அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பங்களில் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்படும் நேர்முக சபையினால் நடாத்தப்படும் நேர்முகப்பரீட்சையில் பெற்றுக்கொண்ட உயர் புள்ளிகள் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர்.
- விண்ணப்பங்கள், உரிய சான்றிதழ்களின் பிரதியுடன் **23.12.2024 ஆம் திகதிக்கு** முன்னர் **நிறைவேற்றுப் பணிப்பாளர், காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம், இல.40, 03 ஆவது மாடி, புத்கமுவ வீதி, ராஜகிரிய** என்ன முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ கையளிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**சட்டத்தரணி. மகேஸ் கட்டுலந்த**

தவிசாளர்

காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம்